வேங்கிக்கால் கிராம ஊராட்சி மன்றத்தின் ஆணை

முன்னிலை :திருமதி.T.சாந்தி தமிழ்செல்வன்,

செ.மு.எண்:2/2024 நாள்: 12.03.2024

பொருள்: மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திருவண்ணாமலை மாவட்டம் / வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - வேங்கிக்கால் ஊராட்சி, வேங்கிக்கால் கிராமம் - **சர்வே எண்:88/1C** ஆகியவற்றில் 0.37 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுகள் - ஒப்புதல் வழங்குதல் குறித்து - **R.தங்கராஜ் மனை எண்:01 முதல் 9 வரை** விற்பனை செய்ய ஒப்புதல் அளித்தல் - சார்பு.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றிக்கை கடிதம் ந.க.எண். 320/2022/TCP3 நாள்: 7.01.2022.
2. அரசாணை (நிலை) எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ4(3)த் துறை நாள்:23.09.2020.
3. அரசாணை (நிலை) எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ4(3)த் துறை நாள்:09.12.2020.
4. அரசாணை (நிலை) எண்:320/2022/TCP3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:07.01.2022 மற்றும் அரசாணை எண்: 320/2022/TCP3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020.
5. இணை இயக்குநர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் கடித எண்:அ2/4746/2023 நாள்:29.09.2023.
6. அரசாணை (நிலை) எண்:138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)த் துறை நாள்:04.06.2004.
7. அரசாணை (நிலை) எண்:79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)த் துறை நாள்:04.05.2017.
8. அரசு கடித எண்:181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:19.12.2020.
9. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 13686/2017/LA1 நாள்: 08.09.2017.
10. திரு.தங்கராஜ் கடிதம் நாள்:03.12.2023
11. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் ந.க.எண்.JPTU5GUJ/2023/TVM/2024/TCP நாள்: 23.02.2024.
12. தலைவர் வேங்கிக்கால் ஊராட்சி, திருவண்ணாமலை ஒன்றியம், அவர்களின் தீர்மான எண்.208, நாள்:12.03.2024

மேற்படி பொருள் மற்றும் பார்வைக்கிணங்க திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம் மற்றும் ஒன்றியம் வேங்கிக்கால் ஊராட்சி, வேங்கிக்கால் கிராமம் - சர்வே எண்கள் **88/1C** ஆகியவற்றில் 0.37 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனை

Scanned with AnyScanner

எண்கள் 01 முதல் 09 வரை உள்ள 09 மனைகள் அமையும் குடியிருப்புக்கு மனைப்பிரிவுக்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை - மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./மா.ந.ஊ.உ.இ(தி.மலை) எண்:23/2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சிக்கு சாலைகள் மூலை முடுக்குகள் மற்றும் மின்மாற்றி அமைவிடம், மேநீர் தேக்க தொட்டி அமைவிடம் ஆகியவைகள் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கூராய்வு கட்டணம் மற்றும் நலபயன் மாற்ற கட்டணம் 3 சதவிகிதம் வசூலிக்கப்பட்டது.

எனவே ம.வ/மா.ந.ஊ.உ.இ(தி.மலை) எண். 23/2024 என்ற அனுமதி எண் மூலம் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மணைப்பிரிவு வரைபடத்திலுள்ள **R.தங்கராஜ்** மணைப்பிரிவிலுள்ள 01 முதல் 09 வரை உள்ள 09 மனைகளை அதன் உரிமையாளர்கள் விற்பனை செய்துகொள்ளவும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

T.சாந்தி
தலைவர்
மேல்சித்தாமூர் ஊராட்சி
திருவண்ணாமலை ஒன்றியம்.

பெறுநர்

மனுதாரர்,
திரு. **R.தங்கராஜ்,**
எண்.250A, அம்மன் கோவில் தெரு,
வடஆண்டாப்பட்டு,
திருவண்ணாமலை.

நகல் : 1. ஊதவி இயக்குநர், நகர் ஊராமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை.
2. இணைசார்பதிவாளர்-II, இணைசார்பதிவாளர்-II, அலுவலகம்
திருவண்ணாமலை.

Scanned with AnyScanner